# ஜைன மதம் - ஓர் அறிமுகம்

புராதன இந்தியாவின் சமயங்களுள் சமணமும் ஒன்று. சமணத்தைப் பின்பற்றுபவர்கள் சமணர்கள் (ஜைனர்கள்) என அழைக்கப்படுகின்றனர். ''ஜைனம்'' என்ற சொல் வெற்றியைக் குறிக்கும் சமஸ்கிருதச் சொல்லான ''ஜின'' என்ற சொல்லில் இருந்து உருவானதாகும். எவரொருவர் தங்கள் உள் மன உணர்ச்சிகளான ஆசை, பற்று, கோபம், பெருமை, பேராசை முதலியவற்றிலிருந்து வெற்றிபெறுகிறாரோ அவரே ஜினர் எனப்படுகிறார்.

சமணத்தின் கொள்கைப்படி உலக பந்தங்களில் இருந்து விடுபட்டவர்களே தீர்த்தங்கரர் எனப்பட்டனர். அவர்கள் மக்களுக்கு உண்மையான தர்மத்தைப் போதித்தனர். அது மக்கள் மறுபிறப்பிலிருந்து விடுதலை பெற உதவுகின்றது.

பகவான் ரிஷபநாதர் (ஆதிபகவன்) 24 தீர்த்தங்கரர்களில் முதலாமவர் ஆவார்.

**24 தீர்த்தங்கரர்களின் விவரங்கள் பின்வருமாறு :**

| தீர்த்தங்கரர் | பெயர் | சின்னம் | பிறந்த இடம் | தகப்பனார் பெயர் | தாயார் பெயர் | முக்திய அடைந்த இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1வது | ரிஷப நாதர்/ ஆதி நாதர் | எருது | அயோத்தியா/ உத்தரபிரதேசம் | ஸ்ரீ நபிராய்ஜி | மருதேவி | கைலாஷ் பர்வதம் |
| 2வது | அஜித் நாதர் | யானை | அயோத்தியா/ உத்தரபிரதேசம் | ஜிதா சத்ரு | விஜயா தேவி | பரஸ்நாத் மலை |
| 3வது | சாம்பவ நாதர் | குதிரை | ஸரஸ்வதி / உத்தரபிரதேசம் | ஜிதாரி | சேனா | சமேத சிகரம் |
| 4வது | அபிநந்தன் நாதர் | குரங்கு | அயோத்தியா/ உத்தரபிரதேசம் | சம்வரா | சித்தார்த்தா | |
| 5வது | சுமதி நாதர் | சிவப்பு வாத்து | அயோத்தியா/ உத்தரபிரதேசம் | மேக பிரபா | சுமங்களா | |
| 6வது | பத்ம பிரபா | தாமரை | கௌசாம்பி/ உத்தரபிரதேசம் | தாரணா (சிதாரா) | சுசிமா | |
| 7வது | சுபார்ஸ்வ நாதர் | சுவஸ்திக் | காசி / உத்தரபிதேசம் | சுப்ரதிஷ்டா | பிருத்வி | |

| தீர்த்தங் கரர் | பெயர் | சின்னம் | பிறந்த இடம் | தகப்பனார் பெயர் | தாயார் பெயர் | முக்திய அடைந்த இடம் |
|---|---|---|---|---|---|---|
| 8வது | சந்திர பிரபா | நிலா | சந்திரபுரி / உத்தரகாண்ட் | மஹாசேனா | லக்ஷ்மணா | சமேத சிகரம் |
| 9வது | புஷ்பதந்தா/ சுவிதி நாதர் | முதலை | காகண்டி/ பிகார் | சுக்ரீவா | ரமா / சுப்ரியா | |
| 10வது | ஷீதல் நாதர் | கற்பக விருட்சம் | பத்ரிகாபுரி / பீகார் | த்ரிதரதா | சுனந்தா | |
| 11வது | ஸ்ரேயான்ஸ நாதர் | காண்டா மிருகம் | சிம்மபுரி | விஷ்ணு | விஷ்ணுத்ரி / (விஷ்ணா) | |
| 12வது | வாஸு பூஜ்யா | பெண் எருமை | சம்பாபுரி / பீகார் | வாஸு பூஜ்யா | விஜயா | சம்பாபுரி மந்த்ர மலை |
| 13வது | விமல நாதர் | பன்றி | காம்பிலியா / உத்தரபிரதேசம் | கிருதவர்மன் | சுரம்யா (சியாமா) | பரஸ்நாத் மலை |
| 14வது | அனந்த நாதர் | முள்ளம் பன்றி | அயோத்தியா/ உத்தரபிரதேசம் | சிம்மசேனா | சர்வவசா | |
| 15வது | தர்மா நாதர் | வஜ்ரா | ரத்ன புரி/ உத்தரபிரதேசம் | பானு | சுவ்ரதா | |
| 16வது | சாந்தி நாதர் | மான் | ஹஸ்தினாபுரம்/ உத்தரபிரதேசம் | விஸ்வ சேனா | ஆசிரா | |
| 17வது | குந்த நாதர் | ஆடு | ஹஸ்தினாபுரம்/ உத்தரபிரதேசம் | சூர்யா (சுரா) | ஸ்ரீ தேவி | |
| 18வது | ஆர நாதர் | மீன் | ஹஸ்தினாபுரம்/ உத்தரபிரதேசம் | சுதர்ஸனர் | மித்ரா தேவி | |
| 19வது | மல்லி நாதர் | கலசம் | மிதிலாபுரி/ உத்தரபிரதேசம் | கும்பா | ரக்க்ஷிதா | |
| 20வது | முனிசுவ்ரதா | ஆமை | குசகிரனகரா | சுமித்ரா | பத்மாவதி | |
| 21வது | நாமி நாதர் | நீல ஆம்பல் | மிதிலாபுரி (மதுரா) / பீகார் | விஜயா | வப்ரா (விப்ரா) | |
| 22வது | நேமி நாதர் | சங்கு | சௌரிபுரா (த்வாரகா) / உத்தரபிரதேசம் | சமுத்ர விஜயா | சிவதேவி | கிர்னார் மலை |
| 23வது | பார்ஸ்வ நாதர் | பாம்பு | காசி (பனாரஸ்)/ உத்தரபிரதேசம் | அஸ்வாசன் | வமா | பரஸ்நாத் மலை |
| 24வது | பகவான் மகாவீரர்/ வர்த்தமானர்/ அதிவீரர் | சிங்கம் | குண்டல்புரம் / பீகார் | சித்தார்த்தா | பிரியகாருணி (திரிஷாலா) | பவபுரி |

23வது தீர்த்தங்கரரான பகவான் பார்ஸ்வ நாதர் பகவான் மகாவீரருக்கு 250 வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர்.